DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No. 27/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.1

Accused A1, A2 present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.முத்து ஜோதி கார்த்திகேயன் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 23rd day of February, 2026.

முதல் விசாரணை

நான் தற்போது துலுக்கன்குறிச்சி கிராமத்தின் கிராம நிர்வாக அதிகாரியாக பணியாற்றி வருகிறேன். கடந்த 2023ம் ஆண்டு கங்கர்செவல் கிராமத்தில் பணியாற்றினேன்.

கடந்த 03.10.2023ம் தேதி மாலை 5.20 மணிக்கு நானும் எனது உதவியாளர் கணேசன் என்பவரும் கிராம நிர்வாக அலுவலகத்தில் பணியில் இருந்தபோது கங்கர்செவல் கிராமத்தின் பஞ்சாயத்து தலைவரின் கணவர் சந்திரசேகர் என்பவர் என்னை எனது கைப்பேசியில் தொடர்பு கொண்டு கிராம எல்கைக்கு உட்பட்ட விக்டோரியா பயர் ஒர்க்ஸில் வெடிவிபத் துநடைபெற்றதாக சொன்னார். உடனே நானும் கணேசனும் விபத்து நடந்த பட்டாசு தொழிற்சாலைக்கு சென்றோம்.

அங்கு என்ன நடந்தது என்று விசாரித்தோம். மாலை 5.15 மணிக்கு வெடிவிபத்து ஏற்பட்டது என்றும், அந்த விபத்தில் 3 பேருக்கு காயம் ஏற்பட்டதாகவும், அவர்கள் பெயர்கள் கணேசன், ராஜா, முத்தம்மாள் என்பதும்,

அவர்களை தொழிற்சாலை வாகனத்தில் எடுத்துக்கொண்டு சிவகாசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டுசென்றதாகவும் தெரிவித்தார்கள்.

மேற்படி பட்டாசு ஆலையின் உரிமையாளர் சங்கர்ராஜா மகன் ராஜேந்திரராஜா ஆவார். போர் மேன் சக்கையா என்பவர் ஆவார். மேற்படி பட்டாசு தொழிற்சாலை நாக்பூர் உரிமம் உடையது ஆகும்.

மேற்படி பட்டாசு ஆலையில் ஏற்பட்ட விபத்திற்கு தொழிற்சாலையின் உரிமையாளரும், போர்மேனும் காரணம் ஆவார்கள். அவர்கள் முறையாக மருந்து கலவையை கலந்து கொடுக்காததும், பணியாளர்களை சரிவர கவனிக்காததும் தான் விபத்திற்கு காரணம் ஆகும்.

எனவே மேற்படி விபத்திற்கு காரணமான பட்டாசு ஆலையின் உரிமையாளர் மீதும் போர் மேன் மீதும் ஆலங்குளம் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார்மனு நான் கொடுத்ததுதான். அந்த **புகார் மனு அசாஆ 1** ஆகும். மேற்படி விபத்து நடைபெற்ற பட்டாசு தொழிற்சாலை எனது கிராம எல்கைக்கு உட்பட்ட பிஞ்சை புல எண்கள் 519, 518/1, 520, 521,, 531, 532, 523, 524, 525 ஆகியவற்றில் உள்ள நிலங்களில் அமைந்துள்ளது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>

நான் கொடுத்த புகார் மனுவில் பஞ்சாயத்து தலைவரின் கணவர் எந்த கைப்பேசி எண்ணிலிருந்து என்னை அழைத்தார் என்பதை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு நான் சென்றபோது நேரம் என்ன என்றால் மாலை 5.25 மணி ஆகும். நாங்கள் சென்ற எவ்வளவு நேரத்தில் போலிசார் வந்தார்கள் என்றால் தகவல் தெரிந்து சுமார் 10 நிமிடத்தில் தீயணைப்பு வாகனம், போலிசார், வருவாய் துறையினர் வந்துவிட்டனர். அவர்களுக்கு யார் தகவல் கொடுத்தது என்றால் நான் தீயணைப்புத்துறைக்கும், வருவாய்துறைக்கும் தகவல் கொடுத்தேன். போலிசாருக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்று தெரியாது.

அசாஆ 1 புகார் மனுவில் மேற்படி விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பதை பின்னால் விசாரித்து தெரிந்து கொண்டேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறான விசாரணையை நான் யாரிடம் எந்த தேதியில் எங்கு வைத்து விசாரித்து தெரிந்துகொண்டேன் என்ற விபரத்தை புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையில் அவ்வாறு நான் யாரையும் விசாரித்து விபத்து குறித்து தெரிந்து கொள்ளவில்லை என்றாலும் போலிசார் சொல்லிக்கொடுத்து நான் புகார் மனுவை எழுதி கையொப்பம் செய்துவிட்டு தற்போது விசாரித்து தெரிந்துகொண்டதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் யாரிடம் எந்த தேதியில் விசாரித்தேன் என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் 3.10.2023 ம் தேதி விபத்து நடந்தவுடன் பட்டாசு ஆலைக்கு சென்று அங்கு பணியாற்றியவர்களிடம் விசாரித்ததாக தெரிவித்துள்ளேன். 3.10.2023 ம் தேதி விபத்து நடந்தவுடன் பட்டாசு ஆலைக்கு சென்று அங்கு பணியாற்றியவர்களிடம் விசாரித்ததாக தெரிவித்துள்ளேன். என்ற விபரத்தை புகார் மனுவில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவிக்கவில்லை.

பட்டாசு தொழிற்சாலைகளில் என்ன என்ன பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படவேண்டும் என்றும், என்ன என்ன விதிமுறைகள் பின்பற்றவேண்டும் என்றும், தொழிலாளர் நலத்துறை மற்றும் வெடிபொருள் துறை ஆகியவற்றில் விதிகள் வறையறுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு முறையாக பட்டாசு தொழிற்சாலைகளில் விதிகள் பின்பற்றப்படுகின்றனவா மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும் மேற்படி துறை அதிகாரிகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் சம்பந்தப்பட்ட பட்டாசு தொழிற்சாலைக்கு சென்று ஆய்வு மேற்படவேண்டும் என்றால் சரிதான்.

விபத்து நடந்த பட்டாசு தொழிற்சாலையில் மருந்து கலவைகளை எதிரிகள் முறையாக கலந்து கொடுக்காததாலும் பணியாளர்களை சரிவர கண்காணிக்காததாலும், மேற்படிவிபத்து நடைபெற்றது என்று நான் எனது முதல்

விசாரணையில் சாட்சியம் அளித்துள்ள நிலையில் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் அரசு அதிகாரி என்பதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் தொழிற்சாலையில் எந்த விதிமுறை மீறலும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

<u>S.C.No. 27/2025</u>

Deposition of witness for Prosecution/Defence/Court : <u>P.W.2</u>

<u>Accused A1, A2 present</u>

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.ரெங்கசாமி | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 23rd day of February, 2026.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கங்கர்செவல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விக்டோரியா பட்டாசு தொழிற்சாலையில் வாட்ச்மேனாக பணியாற்றி வருகிறேன். பட்டாசு தொழிற்சாலையில் விபத்து நடந்தவுடன் போலிசார் அங்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் வரைந்தனர். பார்வை மகஜரில் நானும் சாட்சி மாரியப்பனும் கையொப்பம் செய்தோம். அந்த **பார்வை மகஜர் அசாஆ 2** ஆகும். வேறு எதுவும் எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்படவில்லை. அத்தாட்சியில் உள்ள எனது கையொப்பம் மட்டும் **அசாஆ 3** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக மாற்ற அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை)**

என் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்தபின்னர் அன்றைய தேதியிலேயே 23.30 மணிக்கு விக்டோரியா பயர் ஒர்க்ஸ் அறை எண்

28 ல் மணிமருந்தின் சாம்பல் சிறிதளவும், உருகிய நிலையில் உள்ள அலுமினிய துகள்கள் சிறிதளவும், உடைந்த நிலையில் உள்ள மருந்து செலுத்த பயன்படும் இரும்பு சல்லடை 1, உடைந்த நிலையில் உள்ள மருந்து செலுத்த பயன்படும் மர சக்கை சல்லடை –1 ஆகியவற்றை அத்தாட்சியின் பேரில் கைப்பற்றினார்கள் என்றும் அந்த அத்தாட்சியில் நானும் மாரியப்பனும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது அதை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

பார்வை மகஜரில் என்ன எழுதியிருக்கிறது என்பது எனக்குத் தெரியாது என்றால் சரிதான். என்ன படம் வரைந்தார்கள் என்பது தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.